வாய்மையே வெல்லும்

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 53/மா/2026

நாள்: 03.09.2026

C.D. மெய்யப்பன்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை, ஈஞ்சம்பாக்கம், ஆலிவ் பீச், கதவு எண் 21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C.D. மெய்யப்பன் என்பவரின் 03.02.2026 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.02.2026 அன்று பெறப்பட்டு 53/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, ஈஞ்சம்பாக்கம், ஆலிவ் பீச், கதவு எண் 21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C.D. மெய்யப்பன் என்பவர் தனது 03.02.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"I, C.D. Meiyappan, S/o late C.T. Devaraj, aged about 63 years, Communication address: No.44, 1st Floor, Velachery Main Road, Mahalakshmi Nagar, Chennai 600 073. Residing address: at No.21, Olive Beach, Injambakkam, Chennai-600 115, I hereby submit as follows:

1) The schedule mentioned property, which is subject matter of the representation to Tambaram City Municipal Corporation is situated in Chengalpattu District, Pallavaram Taluk, Jameen Pallavaram Village, formerly bearing Survey No.399/2 measuring 1.34 acres, Survey No.399/3 measuring 2.21 acres and 399/5 (part) admeasuring 1.00 acre out of a total extent of 1.68 acres. These lands have now been duly reclassified and comprised in Pallavaram Town, Ward-E, Block-2, Town Survey Nos.23, 24, 25, 26, 27, 28, 29, 30 and 31, 32, 33 part-(33/2) aggregating to a total extent of 4.55 acres.

2) The property originally belonged to my father, Mr. C.T. Devaraj, who purchased the same through two different sale deeds; vide Doc. No. 247/1959 dated 02.02.1959 comprising Survey No.399/2 measuring 1.34

acres, 399/5 measuring of 1.68 acres and vide Doc. No.2633/1961 dated 13.11.1961 comprising Survey No.399/3 measuring 2.21 acres respectively. After the purchase of the property, my father Mr. C.T. Devaraj, sold legally 68 cents vide Doc. No.3111/1962 dated 29.06.1962, which is located at south west corner which is also reflected in FMB Revenue record, comprised in Survey No.399/5 Partly, and the remaining land was vacant and was not sold to any other persons. The other property under S.No.399/2 and 399/3 was in his possession and enjoyment. My father passed away on 23.08.1989, leaving behind his legal heirs, namely D. Ganga Bai (Late), Mr. D.E. Ramakrishnan (Late), C.D. Vivekanandha, C.D. Meiyappan (myself), Jaya Balasubramanian, and S. Meenakshi. Upon his demise, I became one of the absolute owners of the above mentioned property.

Further, Mr. D.E. Ramakrishnan, son of late C.T. Devaraj, died on 17.03.2011, and upon his death, his undivided share devolved on his wife and children, namely (1) Mrs. R. Geetha Lakshmi (widow), (2) Mr. R. Vasanth Kumar (Son), and (3) Mr. R. Abhinandhan (son). Subsequently, my mother, Mrs. D. Ganga Bai, passed away on 22.07.2017, after which the surviving legal heirs, which includes myself, became the exclusive and absolute owners of the remaining estate and all rights attached to it.

3) I further submit that, for the purpose of determining the exact measurment and extent of my property, on upon application by me Tahsildar conducted the survey and issued a report bearing ந.க. எண் 957/2024/ஆ1, dated 13.03.2024. As per the said report, Survey Nos.399/2 and 399/3 were clubbed together, and according to the revenue records, my old Survey No.399/3A1A falls within Ward 'E', Block No.2, Town Survey No.23, measuring a total extent of 10,084 square metres (equivalent to 2 acres and 49 cents). Out of the said total extent, only about 30,000 square feet (approximately 68.9 cents) is presently lying vacant, and the remaining extent of approximately. 1 acre and 80 cents has been illegally encroached upon by third parties, who have constructed buildings and are residing therein without any lawful right or authority. The survey report further records that the Tambaram City Municipal Corporation has laid roads, installed streetlights, and established a modern water purifier centre within the encroached portion of the said property.

4) I further submit that, pursuant to my representation dated 26.08.2024 seeking an enquiry into the cancellation of patta wrongly issued for roads and common amenities within my land, I was constrained to approach the Hon'ble High Court of Madras by filing a Writ Petition in W.P. No.33646 of 2024. By order dated 05.12.2024, the Hon'ble High Court was pleased to direct the Tahsildar, Pallavaram, to consider my said representation dated 26.08.2024 and after giving due notice to all parties, hear their objection and pass speaking order within a period of twelve weeks from the receipt of a copy of the order.

5) I further submit that, I possesses the entire relevant title document for the trace of my title for the said property from the year 1959. All pattas in respect of the subject property stand in my favour. After the purchase of

the property the title owner Mr. C.T. Devaraj who is my father has not conveyed the property to any third person except those that are specifically admitted above. The total extent of the remaining 4.55 acres still untransformed of ownership.

6) It is further submitted that in the mean while some wrongful elements have taken advantage of the demise of my father's death and have entered the possession of the vacant premises and have been using the premises by illegally obtaining all facility from corporation without any kind of title relating to the said property.

7) I have issued two representation dated 13.02.2025 & 14.02.2025 to Tambaram City Municipal Corportion, duly acknowledged by the office on 17.02.2025, for cancellion property tax and to stop construction of storm water drain after which I issued another representation dated 03.01.2026, for action into unauthorized commercial and residential building, and to forthwith stop providing further municipal benefits and to remove all municipal benefits already provided by the Tambaram City Municipal Corportion, I have issued representation for cancellation of all property-related taxes assessed in respect of commercial and residential buildings illegally constructed on my land, and to restrain the levy or assessment of any new taxes in my land which has been unauthorisedly obtained by certain land-grabbers who are all having residence in and around Pillayar Koil Street, Kamaraj Nagar, Pallavaram, Chennai-600 043. In the aforesaid representation, I have ex-facie and comprehensively set out all material facts, circumstances, and the chain of events pertaining to the said property.

8) Despite the submission of earlier representations, no action whatsoever has been initiated by the Tambaram City Municipal Corporation, nor has any written communication been furnished to me. Owing to such inaction, I personally visited the offices of the Tambaram City Municipal Corporation on several occasions and repeatedly apprised the officials concerned of my grievance. However, despite multiple personal follow-ups, no response or remedical action was taken.

9) Thereafter, a legal notice on 02.12.2025 was duly issued and served upon the Tambaram City Municipal Corporation, reiterating my earlier representations. However, even after receipt of the said legal notice, my grievances has neither been acknowledged nor addressed. Such continued and unexplained administrative inaction amounts to gross dereliction of statutory duty and has casued me grave prejudice, resulting in substantial hardship, irreparable loss, and severe mental agony.

In these circumstances, it is unlawful for any person to carry out any activity whatsoever on my land. All relevant revenue records unequivocally establish my title (ownership) and possessory rights over the said property. In view this I hereby seek to direct the commissioner of Tambaram City Municipal Corporation consider my representation and subsequently cancel all property tax assessment, water tax, Under Ground Drainage tax which has been gained illegally by others and to restrain the levy or assessment of any new taxes, remove storm water drain, stop any further construction of storm water drain,

remove Under Ground Drainage (UGD) connection, remove Road Connection provided for buildings illegally erected in my land. Subsequently issue notice, take necessary action and demolish building which are constructed without any permission and forthwith stop providing any further this kind of municipal benefits for my land situated in Chengalpattu District, Pallavaram Taluk, Jameen Pallavaram Village, formerly bearing Survey No.399/5 admeasuring 1.00 acre out of a total extent of 1.68 acres, Survey No.399/2 measuring 1.34 acres; and Survey No.399/3 measuring 2.21 acres. These lands have now been duly reclassified and comprised in Pallavaram Town, Ward-E, Block-2, Town Survey Nos.23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33 (Part) aggregating to a total extent of 4.55 acres. Such acts, carried out without my consent or knowledge, are not only improper but also ipso facto facilitating the encroachers without any title over the property, thereby giving rise to grave legal consequences. Any continuation of these unlawful extensions or municipal benefits in favour of the encroachers directly infringes my vested rights and constitutes a clear violation of statutory and constitutional protections relating to property.

I therefore humbly request your good office to Direct to forthwith stop providing any further municipal benefits and to remove all municipal benefits already provided by the Tambaram City Municipal Corporation,-and for cancellation of all property-related taxes assessed in respect of commercial and residential buildings illegally constructed on my land, and to restrian the levy or assessment of any new taxes in respect thereof and take prompt and appropriate action on this representation in accordance with law. I further request that I may kindly be informed of the action taken pursuant to this representation. I am ready and willing to produce any documents or records available with me, as and when required, for your kind consideration."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 20.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், மனுதாரர் தனது 20.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"I, C.D. Meiyappan, submit ths reminder representation in continuation of my earlier representation dated 03.02.2026, which remains unaddressed to date:

1) The property situated in Chengalpattu District, Pallavaram Taluk, Jameen Pallavaram Village, originally comprised in Survey Nos.399/2 measuring 1.34 acres, 399/3 measuring 2.21 acres and 399/5 (part) admeasuring 1.00 acre out of 1.68 acres, aggregating to a total extent of 4.55 acres and now reclassified under Pallavaram Town, Ward-E, Block-2, Town Survey Nos.23, 24, 25, 26, 27, 28, 29, 30 and 31, 32, 33 part-(33/2). The said property originally belonged to my father Late C.T. Devaraj, who purchased the same under registered sale deeds bearing Doc. No. 247/1959 dated 02.02.1959 and Doc. No.2633/1961 dated 13.11.1961. Except for an extent of 68 cents sold under Doc. No.3111/1962, no other portion has been alienated. Upon his demise and that of other legal heirs,

the property devolved upon the surviving legal heirs including myself, and I am one of the absolute owners.

2) As per the Tahsildar's report dated 13.03.2024, a substantial portion of the property has been illegally encroached, and unauthorized commercial and residential constructions have been put up. Further, the Tambaram City Municipal Corporation has facilitated such encroachments by providing roads, storm water drains, underground drainage connections, water supply and other civic amenities to illegal occupiers.

3) Several representations and legal notices were issued to the Tambaram City Municipal Corporation seeking cancellation of illegally levied property tax, water tax and underground drainage tax, and further requesting not to grant approval for any commercial or residential building plans, removal of unathorized constructions, and withdrawal of all municipal benefits extended to such encroachers. However, no reply has been furnished and no action has been taken till date.

4) Therefore, I approached this Hon'ble Authority by way of representation dated 03.02.2026, seeking appropriate directions to the Commissioner, Tambaram City Municipal Corporation, to consider my earlier representations and legal notices regarding cancellation of all illegal tax assessments, restrain the levy of any further taxes, remove unauthorised municipal facilities including roads and drainage connections, stop further underground drainage works, and demolish all buildings constructed without approval.

5) However, even after the lapse of considerable time, no action has been taken and no reply has been furnished, resulting in continued illegal occupation, serious prejudice, financial loss, and violation of my lawful property rights. If immediate steps are not taken, the continued illegal occupation and unauthorized municipal interventions could cause irreparable damage to the property and further exacerbate the losses.

In view of the above, it is respectfully requested that this Hon'ble Authority may be pleased to take immediate action on the representation dated 03.02.2026 and issue necessary directions to the Commissioner, Tambaram City Municipal Corporation regarding the representation and notice to cancel all ilegal tax assessments. restrain further levy of taxes, remove encroachments and unauthorised constructions, withdraw all unlawful municipal benefits, and furnish a reasoned reply without further delay.".

5. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 உதவி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 1510/2026/அ1/ம–2 நாள் 08.04.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 பகுதிக்குட்பட்ட வார்டு எண் 13, பிள்ளையார் கோவில் தெரு, காமராஜ் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சொத்துவரியினை ரத்து செய்ய கோரியும், அடிப்படை வசதிகளை (சாலை, குடிநீர், தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால்வாய்) திரும்ப பெற கோரி 20.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் மனு செய்துள்ளார்.

மனுதாரர் மேற்படி இடம் உரிமை கோரி மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் மீது மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு (எண் W.P. No.33646/2024) தொடரப்பட்டு, 05.12.2024ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் சுமார் 86 குடியிருப்புதாரர்கள் பல்லாவரம் நகராட்சியாக இருந்த காலத்திலிருந்து சுமார் 40 வருடங்களாக வசித்து வருகின்றார்கள். பல்லாவரம் நகராட்சியாக இருந்த காலத்தில் **unassessed Survey** பணி மேற்கொள்ளும்போது வரிவிதிப்பு செய்யப்படாத குடியிருப்புகளை கண்டறியப்பட்டு குடியிருப்புதாரர்களின் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதிக்கு உள்ளாட்சியின் விதிபடி அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

மேற்படி குடியிருப்புதாரர்களின் கோரிக்கையின்பேரில், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெரு விளக்கு, சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மனுதாரர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இதுவரை அவரது வழக்கு நிலுவையில் உள்ளது. அவ்வழக்கு இன்று வரை அன்னாருக்கு சாதகமாக தீர்ப்பாகவில்லை என்றும் தெரிகிறது. மனுதாரர் உரிய நீதிமன்றத்தில் இச்சொத்தை விளம்புகை உத்தரவு மற்றும் குடியிருப்போர்களை வெளியேற்ற உத்தரவு பெற்று அவ்வுத்தரவை நீதிமன்றம் நிறைவேற்று மனுவின் வாயிலாக நிறைவேற்றினால் மட்டுமே அவர் கோரியது போன்று சொத்துவரி விதிப்புகளை ரத்து செய்திடவும் மற்றைய அடிப்படை வசதிகளை திருத்திடவும் இயலும் என பணிவுடன் தெரிவித்து கொள்ளப்படுகிறது.''

6. மனுதாரர் சார்பாக வழக்கறிஞர்கள் திரு. D.புவனேஷ் மற்றும் திருமதி. J.சோபியா ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''சென்னை, பல்லாவரம், தாலுக்காவில் மனுதாரரின் தந்தையரால் பின்வரும் நிலங்கள் கிரையம் செய்யப்பட்டன:-

சென்னை, பல்லாவரம் தாலுக்கா, ஜமீன் பல்லாவரம் வில்லேஜ்,

சர்வே எண் 399/2 ல் 1.34 ஏக்கர்
சர்வே எண் 399/5 ல் 1.68 ஏக்கர்
சர்வே எண் 399/3 ல் 2.21 ஏக்கர்

மேற்கண்ட கிரையத்திற்கு பின் மனுதாரரின் தந்தை சர்வே எண் 399/5 பகுதியில் 68 செண்ட் நிலத்தை விற்றுவிட்டார். மற்ற நிலங்கள் மனுதாரரின் தந்தையின் வசம் இருந்தது. மனுதாரர் தந்தை இறந்தபின் மனுதாரர் விண்ணப்பத்தின் அடிப்படையில் தாசில்தார் அவர்கள் கள ஆய்வு செய்து சர்வே எண் 399/2 மற்றும் 399/3 ஒன்றாக இணைத்து பழைய சர்வே எண் 399/3A1A ன்படி 10,084 சதுர மீட்டராகும். தற்போது இந்த சர்வே எண்கள் மறுவகைப்படுத்தப்பட்டு டவுன் சர்வே எண் 23, 24, 25, 26, 27, 28, 29, 30 மற்றும் 31, 32, 33, பகுதி 33/2 ஆக குறிப்பிடப்பட்டு, அதன் மொத்த நிலப் பரப்பளவு 4.55 ஏக்கராக உள்ளது. இவற்றில் 30,000 சதுரஅடி தற்போது காலிமனையாக உள்ளது. ஆனால் மீதமுள்ள 1 ஏக்கர் 80 செண்ட் நிலம் சட்டவிரோதமாக தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு அதில் வசித்து வருவோருக்கு தாம்பரம்

மாநராட்சியால் அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெருவிளக்குகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையம் போன்றவை செய்து தரப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக பொது வசதிகளுக்காக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P No.33646 of 2024 மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 5.12.2024 நாளிட்ட ஆணையில் மனுதாரரின் 26.06.2024 நாளிட்ட மனுவினை பரிசீலனை செய்து, எல்லா தரப்பினருக்கும் உரிய வாய்ப்பு அளித்து அவர்களின் ஆட்சேபணை பெற்று விரிவான ஆணை 12 வாரங்களுக்குள்வெளியிடுமாறு பல்லாவரம் தாசில்தார் அவர்களுக்கு உத்தரவிட்டது.

மேற்கண்ட மனுதாரரின் சட்டபூர்வமான நிலத்தில் ஆக்கிரமிப்புதாரர்களால் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு தாம்பரம் மாநகராட்சியால் ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் சொத்துவரி சட்டத்திற்கு புறம்பாக வசூலிக்கப்படுகிறது எனவே சென்னை பல்லாவரம், காமராஜ் நகர், பிள்ளையார் கோவில் தெரு மற்றும் அதைச்சுற்றி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி, வணிக வரி, தண்ணீர் வரி, குப்பை வரி, கட்டிடங்களுக்கான அனுமதி ஆகியவற்றை ரத்துசெய்யுமாறும் கழிவுநீர் கால்வாய் கட்டுவதை நிறுத்துமாறும் 03.01.2026 மற்றும் 06.02.2026 நாளிட்ட மனுக்கள் மனுதாரரால் அளிக்கப்பட்டது. ஆனால் இது வரை தாம்பரம் மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் எங்கள் புகார் தொடர்பாக தாம்பரம் மாநகராட்சியில் தகவல் அறியும் சட்டம் 2005ன் கீழ் முதல் மேல் முறையீடு மற்றும் இரண்டாம் மேல்முறையீடு அளித்தும் தகவல் ஏதும் தரப்படவில்லை. எனவே, தமிழ்நாடு மாநில தகவல் ஆணயத்திற்கு முறையீடு செய்து நிலுவையில் உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 05.12.2024 நாளிட்ட உத்தரவு பிறப்பித்தவாறு பல்லாவரம் தாசில்தார் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இது சம்மந்தமாக அவமதிப்பு வழக்கு பதிவு செய்துள்ளோம். ஆனால் இவ்வழக்கிற்கான எண் வழங்கப்படவில்லை.

இம்முறைமன்ற நடுவத்தில் இன்று நடைபெற்ற விசாரணையில் தாம்பரம் மாநகராட்சியால் கோரப்பட்டவாறு, மனுதாரரின் சொத்துக்குறித்தான தாய் பத்திரம், பத்திர பதிவு ஆவணங்கள் மற்றும் பட்டா நகல்கள், தாம்பரம் மாநகராட்சியில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறோம்.

இருப்பினும், மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களில் மனுதாரரது சட்டப்பூர்வமான உரிமையுடைய நிலத்தில் சட்டவிரோதமாக கட்டிடங்கள் கட்டிய ஆக்கிரமிப்புதாரர்களுக்கு தாம்பரம் மாநகராட்சியால் அளிக்கப்பட்டுவரும் மேற்கூறிய எல்லாவிதமான அடிப்படை வசதிகளை நிறுத்தவும், சொத்துவரி வசூலிக்க தடைவிதிக்கவும், தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.''

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர், உதவியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 09.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் சுமார் 86 குடியிருப்புதாரர்கள் பல்லாவரம் நகராட்சியாக இருந்த காலத்திலிருந்து சுமார் 40 வருடங்களாக வசித்து வருகின்றார்கள். பல்லாவரம் நகராட்சியாக இருந்த காலத்தில் **unassessed Survey** பணி மேற்கொள்ளும்போது வரிவிதிப்பு செய்யப்படாத குடியிருப்புகளை கண்டறியப்பட்டு குடியிருப்புதாரர்களின் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அக்குடியிருப்புவாசிகளின்

கோரிக்கையின்பேரில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெரு விளக்கு, சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 பகுதிக்குட்பட்ட வார்டு எண் 13, பிள்ளையார்கோவில் தெரு, காமராஜ் நகர், ஆகிய பகுதிகளின் உரிமை கோரி மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் மீது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.33646/2024 தொடரப்பட்டு, அவ்வழக்கில் 05.12.2024 நாளிட்ட ஆணையில் மனுதாராரின் மனுவினை பரிசீலனை செய்து இவ்வழக்கு தொடர்பு உடையவர்களுக்கு தாக்கீது அனுப்பி அவர்களின் ஆட்சேபணை பெற்று 12 வாரங்களுக்குள் ஆணை பிறப்பிக்குமாறு பல்லாவரம் தாசில்தார் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டு தற்போது வரை இறுதி ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

இருப்பினும் மேற்கண்ட மனுதாரர் தனது தாவா சொத்து சம்மந்தமாக தாய் பத்திரம் நகல், பத்திர பதிவு ஆவணங்களின் நகல், மற்றும் பட்டா நகல், ஆகியவற்றை தாம்பரம் மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேற்கண்ட ஆவணங்கள் பரிசீலக்கப்பட்டு வருவாய் துறையின் அறிக்கையினை பெற்று அதனடிப்படையில் தாம்பரம் மாநகராட்சியால் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.''.

8. முறையீட்டு மனுதாரரின் மனுக்கள், மனுதாரர் சார்பாக ஆஜரான வழக்கறிஞர்களின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 உதவி ஆணையாளரின் அறிக்கை, தாம்பரம் மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர், உதவியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை, பல்லாவரம் தாலுக்கா, ஜமீன் பல்லாவரம் வில்லேஜ்–ல் உள்ள சர்வே எண் 399/2 ல் 1.34 ஏக்கர், சர்வே எண் 399/5 ல் 1.68 ஏக்கர் மற்றும் சர்வே எண் 399/3 ல் 2.21 ஏக்கர் நிலங்கள் மனுதாரரான திரு. C.D. மெய்யப்பன் என்பவரின் தந்தையரால் கிரையம் செய்யப்பட்ட பின், சர்வே எண் 399/5 பகுதியில் 68 செண்ட் நிலத்தை மனுதாரரின் தந்தையால் விற்கப்பட்டும், மற்ற நிலங்கள் மனுதாரரின் தந்தையின் வசம் இருந்தது என்பதும், மனுதாரர் தந்தை இறந்தபின் மனுதாரர் விண்ணப்பத்தின் அடிப்படையில் தாசில்தார் கள ஆய்வு செய்து சர்வே எண் 399/2 மற்றும் 399/3 ஒன்றாக இணைத்து பழைய சர்வே எண் 399/3A1A ன்படி 10,084 சதுர மீட்டராகும் என்பதும், தற்போது இந்த சர்வே எண்கள் மறுவகைப்படுத்தப்பட்டு டவுன் சர்வே எண் 23, 24, 25, 26, 27, 28, 29, 30 மற்றும் 31, 32, 33, பகுதி 33/2 ஆக குறிப்பிடப்பட்டு, அதன் மொத்த நிலப் பரப்பளவு 4.55 ஏக்கராக உள்ளது என்பதும், இவற்றில் 30,000 சதுரஅடி தற்போது காலிமனையாக உள்ளது என்பதும், மீதமுள்ள 1 ஏக்கர் 80 செண்ட் நிலம் சட்டவிரோதமாக தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு அதில் வசித்து வருவோருக்கு தாம்பரம் மாநராட்சியால் அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெருவிளக்குகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையம் போன்றவை செய்து தரப்பட்டுள்ளன என்பதும், சட்டவிரோதமாக பொது வசதிகளுக்காக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P No.33646 of 2024 மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 5.12.2024 நாளிட்ட ஆணையில் மனுதாரரின் 26.08.2024 நாளிட்ட மனுவினை பரிசீலனை செய்து, எல்லா தரப்பினருக்கும் உரிய வாய்ப்பு அளித்து அவர்களின் ஆட்சேபணை பெற்று விரிவான ஆணை 12 வாரங்களுக்குள் வெளியிடுமாறு பல்லாவரம் தாசில்தாருக்கு உத்தரவிட்டது என்பதும், மனுதாரரின் சட்டபூர்வமான நிலத்தில் ஆக்கிரமிப்புதாரர்களால் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு தாம்பரம் மாநகராட்சியால் ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் சொத்துவரி சட்டத்திற்கு

புறம்பாக வசூலிக்கப்படுகிறது என்பதும், சென்னை பல்லாவரம், காமராஜ் நகர், பிள்ளையார் கோவில் தெரு மற்றும் அதைச்சுற்றி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி, வணிக வரி, தண்ணீர் வரி, குப்பை வரி, கட்டிடங்களுக்கான அனுமதி ஆகியவற்றை ரத்துசெய்யுமாறும் கழிவுநீர் கால்வாய் கட்டுவதை நிறுத்துமாறும், மனுதாரரால் தாம்பரம் மாநகராட்சிக்கு மனுக்கள் அளிக்கப்பட்டும், நடவடிக்கை எடுக்காததால், மனுதாரர் அப்புகார் தொடர்பாக தாம்பரம் மாநகராட்சியில் தகவல் அறியும் சட்டம் 2005ன் கீழ் முதல் மேல் முறையீடு மற்றும் இரண்டாம் மேல்முறையீடு அளித்தும் தகவல் ஏதும் மனுதாரரால் பெறப்படாமல் நிலுவையில் உள்ளது என்பதும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 05.12.2024 நாளிட்ட உத்தரவு பிறப்பித்தவாறு பல்லாவரம் தாசில்தார் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், இது சம்மந்தமாக அவமதிப்பு வழக்கு பதிவு செய்து இதுவரை எண் வழங்கப்படவில்லை என்பதும், இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் தாம்பரம் மாநகராட்சியால் கோரப்பட்டவாறு, மனுதாரரின் சொத்துக்குறித்தான தாய் பத்திரம், பத்திர பதிவு ஆவணங்கள் மற்றும் பட்டா நகல்கள், தாம்பரம் மாநகராட்சியில் விரைவில் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படும் என்பதும், மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களில் மனுதாரரது சட்டப்பூர்வமான உரிமையுடைய நிலத்தில் சட்டவிரோதமாக கட்டிடங்கள் கட்டிய ஆக்கிரமிப்புதாரர்களுக்கு தாம்பரம் மாநகராட்சியால் அளிக்கப்பட்டுவரும் மேற்கூறிய எல்லாவிதமான அடிப்படை வசதிகளை நிறுத்துவும், சொத்துவரி வசூலிக்க தடைவிதிக்கவும், தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுக்கள் மற்றும் மனுதாரரது சார்பாக ஆஜரான வழக்கறிஞர்களின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் சுமார் 86 குடியிருப்புதாரர்கள் பல்லாவரம் நகராட்சியாக இருந்த காலத்திலிருந்து சுமார் 40 வருடங்களாக வசிக்கிறார்கள் என்பதும், பல்லாவரம் நகராட்சியாக இருந்த காலத்தில் **unassessed Survey** பணி மேற்கொள்ளும்போது வரிவிதிப்பு செய்யப்படாத குடியிருப்புகளை கண்டறியப்பட்டு குடியிருப்புதாரர்களின் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டு, அக்குடியிருப்புவாசிகளின் கோரிக்கையின்பேரில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெரு விளக்கு, சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்து கொடுக்கப்பட்டது என்பதும், மனுதாரர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 பகுதிக்குட்பட்ட வார்டு எண் 13, பிள்ளையார்கோவில் தெரு, காமராஜ் நகர், ஆகிய பகுதிகளின் உரிமை கோரி மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் மீது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.33646/2024 தொடரப்பட்டு அவ்வழக்கின் தீர்ப்பின்படி, மனுதாரரின் மனுவினை பரிசீலனை செய்து இவ்வழக்கு தொடர்பு உடையவர்களுக்கு தாக்கீது அனுப்பி அவர்களின் ஆட்சேபணை பெற்று 12 வாரங்களுக்குள் ஆணை பிறப்பிக்குமாறு பல்லாவரம் தாசில்தாரருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதும், ஆனால் பல்லாவரம் தாசில்தார் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்படவில்லை என்பதும், மனுதாரர் தனது தாவா சொத்து சம்மந்தமாக தாய் பத்திரம் நகல், பத்திர பதிவு ஆவணங்களின் நகல், மற்றும் பட்டா நகல், ஆகியவற்றை தாம்பரம் மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கும்பட்சத்தில் அந்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவாய் துறையின் அறிக்கையினை பெற்று அதனடிப்படையில் தாம்பரம் மாநகராட்சியால் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் தாம்பரம் மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர், உதவியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ளது குறித்து, மனுதாரர் தனது தாவா சொத்து சம்மந்தமாக தாய் பத்திரம் நகல், பத்திர பதிவு ஆவணங்களின் நகல், மற்றும் பட்டா நகல், ஆகியவற்றை தாம்பரம் மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேற்கண்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, வருவாய் துறையின் அறிக்கையினை பெற்று அதனடிப்படையில் தாம்பரம் மாநகராட்சியால் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாம்பரம் மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர், உதவியாளர், இளநிலை பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையிலும், மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் W.P. No.33646/2024 நாள் 05.12.2024ல் உத்தரவு பிறப்பித்ததை பல்லாவரம் தாசில்தார் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதால், இது சம்பந்தமாக மனுதாரரால் தொடரப்பட்ட அவமதிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்கான எண் வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற 05.12.2024 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில், உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. C.D. மெய்யப்பன்,
கதவு எண் 44, முதல் மாடி, வேளச்சேரி மெயின் ரோடு,
மகாலட்சுமி நகர், சென்னை–600 073.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) உதவி ஆணையர், மண்டலம்–2
தாம்பரம் மாநகராட்சி,
சென்னை–600 044.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ,கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.